**தினத்தந்தி (02.05.2023)**



# மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

நொய்யல், மே.2-
புகளூரில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தின் சமுதாய நலப்பணித்திட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் ஓலப்பாளையத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரிடம், காகித ஆலை நிறுவனத்தின் செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம் மற்றும் ஆராய்ச்சி-அபிவிருந்தி துறை) சீனிவாசன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி-திட்டம் ஒருங்கிணைப்பு) வரதராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், பொது மேலாளர் (சக்தி) நாகராஜன், துணை பொது மேலாளர் (பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத்துறை) ராதாகிருஷ்ணன் ஆகியோர் வழங்கினர்.

SM-HR / GM-HR

For perusal please.

**தினமணி (30.04.2023)**

# டி.என்.பி.எல். ஆலையில் முப்பெரும் விழா

**கரூர், ஏப். 29:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் வழங்கப்பட்ட பயிற்சி வகுப்புகளில் காவலர்களாகத் தேர்வு பெற்றவர்களுக்குப் பாராட்டு விழா, ரூ.4.30 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், தளவாடப் பொருள்கள் வழங்கும் விழா ஆலை வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு தமிழ்நாடு அரசு காவல் துறையில் பயிற்சிக் காவலர்களாக தேர்வு பெற்ற 21 பேருக்கு பாராட்டு விழா மற்றும் ஆலையைச் சுற்றியுள்ள கோயில்களுக்கு ரூ.4.30 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆலையின் கருத்தரங்கு மைய நிர்வாக அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவில், முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை) ஆர்.சீனிவாசன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி மற்றும் திட்டம் ஒருங்கிணைப்பு) எஸ்.ஜே.வரதராஜன், பொது மேலாளர் (மனித வளம்) கே.கலைச்செல்வன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர். கிருஷ்ணன் சிறப்புரையாற்றி, தேர்வுபெற்ற 21 பேருக்கும், பொன்னாடை அணிவித்து, பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து, நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

காகித நிறுவனத்தின் முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவக்குமார் வரவேற்றார். விழாவில் பொதுமேலாளர் எஸ்.நாகராஜன், துணை பொது மேலாளர் எம்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காலைக்கதிர் (01.05.2023)

# போலீஸ் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு

கரூர், மே 1–

கரூர்–புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலையின், கருத்தரங்கு மைய நிர்வாக அலுவலகத்தில், சமுதாய நல மேம்பாட்டு திட்டத்தில் நடத்தப்பட்ட போட்டி தேர்வுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு விழா நடந்தது.

முதன்மை பொது மேலாளர் (வனத் தோட்டம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை) சீனிவாசன் தலைமை வகித்தார். இங்கு, தமிழக போலீஸ் தேர்வுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் பயிற்சி பெற்ற, 21 பேர் போலீசாக தேர்வு செய்யப்பட்டதற்கு, செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

மேலும், ஆலையை சுற்றியுள்ள கோவில்களுக்கு, 4.30 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத் திட்ட உதவி வழங்கப்பட்டது. முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி மற்றும் திட்டம் ஒருங்கிணைப்பு) வரதராஜன், பொது மேலாளர் (மனித வள்ம்) கலைச்செல்வன் உள்பட பலர் பங்கேற்றனர்.